பிற்பகல் 1-35

9. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

34. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் ளபகிர்மான விதித்தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து

6-9-2013 ஆம் நாளிட்ட எண் தமிஓ.ஆ/மிபவி/8-17-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித் தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து 12-9-2013 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.க.வி./13-2-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

36. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள் (தொகுதி 1 மற்றும் 2) (ஆங்கிலம்), நிதி ஒதுக்க கணக்குகள் (ஆங்கிலம்) மற்றும் "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" (தமிழ், ஆங்கிலம்) ஆகியவற்றை உள்ளடக்கிய குறுந்தகடு. [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

37. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

38. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

39. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-